[2011 செப்டம்பர் 7

இணைப்பு IV

(79ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண்–33 சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012

முன்னுரை

சட்டமானது, சமுதாய ஒழுங்கினைப் பேணிவருவதற்கும், நபர்களுக்கும், சொத்துக்களுக்கும், பாதுகாப்பு வழங்குவதற்காகவும், சமுதாயமானது தானே அமைத்துக்கொண்ட விதிகளின் அமைப்பாக இருக்கின்றது. சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்கிய வகையில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சட்டம் குறித்து நேர்மறையாளர்களின் கருத்தானது இரண்டு பரந்த கோட்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. அவையாவன:—

(1) நீதி, ஒழுக்கநெறி மற்றும் பிறநெறிமுறை எதனையும் நடைமுறைப்படுத்துமாறு சட்டங்கள் கோரலாம்; மற்றும்

(2) சட்டமானது ஒழுங்கை நிலைநிறுத்தவும் சமுதாயத்தை ஆளுகை செய்வதற்கும் வகைசெய்வதற்கான விதிகளின் தொகுப்பேயன்றி வேறல்ல.

ஆஸ்டின் கூற்றுக்கு இணங்கிய வகையில் சட்டம் என்பது, "பொதுமக்கள் கீழ்ப்படிகிற வழக்கத்தைக் கொண்டுள்ள இறையாண்மை சக்தி ஒன்றில் இருந்துவரும் ஆணைகளின் அச்சுறுத்தல்களைக் கொண்ட கட்டளைகள்" ஆகும். சட்டப்படியான விதிகளாகக் கருதப்பட்டிருக்கிற அறநெறி அடிப்படையில் நல்லமுறையில் அமைக்கப்பட்ட பொருண்மைகள் மற்றும் வழக்கங்கள் பொதுமக்களின் நல்லகுணங்களின் வளர்ச்சியை மேம்படுத்துகின்றன. சட்டமானது சமுதாய நிறுவனமாக இருக்கிற நிலையில் அது சமுதாயத்தின் மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டுள்ள பிற பல்வேறு பிரிவுகளுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. மனிதனின் அனுபவம்தான் சட்டத்தின் அடிப்படையாகும்; சட்டமானது சக்திவாய்ந்த சமுதாயத் தேவைகளை

2011 செப்டம்பர் 7]

எதிர்கொள்வதற்கு வடிவமைக்கப்பட்டதாக இருக்கிறது. சமுதாயப் பிரச்சினைகளையோ பிறபிரச்சினைகளையோ புலனாய்வு செய்தல், பகுத்து ஆய்தல், தீர்த்துவைத்தல் ஆகிய செயல்முறைகளைப் பயன்படுத்துகிற பயனுறு அறிவியலாக சட்டத்தைக் கருதுகிற நடைமுறை அணுகுமுறையை அது ஏற்றுக்கொள்கிறது; அல்லது அதுமுதல் நிலையில் சாத்தியமான அணுகுமுறை ஒன்றை ஏற்றுக்கொள்வதன்மூலம் நீதிமுறை தீர்ப்புகளின் வாசகங்களின்படி சட்டத்தைப் பொருள் வரையறை செய்கிறது.

சட்டத்தின் குறிக்கோள்கள்—

(1) சிறியமுறையிலான எதிர்ப்புத்தன்மை அல்லது முரண்பாடு ஆகியன ஏற்படுவதற்கிடையே எத்தனை விருப்பங்களை மனநிறைவு செய்யக்கூடுமோ அத்தனை விருப்பங்களை மனநிறைவு செய்தல்;

(2) சமுதாயத்தின் நோக்கங்களுடன், தனிநபரின் நோக்கங்கள், விருப்பங்கள், தேவைகள் ஆகியவற்றைச் சமாதானப்படுத்தி ஒன்று சேர்த்தல்; மற்றும்

(3) தனிநபருக்கும் சமுதாயத்திற்கும் இடையேயான உறவில் நல்லிணக்கத்தைக் கொண்டுவருதல்.

சட்டத்தின் பணியானது "சமுதாயத்தைக் கட்டமைப்பதாக" இருக்கிறது; மேலும் இந்தச் சமுதாயக் கட்டமைப்பு சமுதாய நல்வாழ்வு என்ற களத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் ஆகியவற்றைக் கொண்ட அமைப்புகளின் ஆதரவுடன் காவல்துறையினால் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பின் ஒரு முன்தேவைப்பாடாக இந்திய அரசமைப்பானது அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் மக்களின் அடிப்படை உரிமையளிப்பதற்கும் வகைசெய்துள்ளது. சட்டமியற்றுதல், நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகிய மூன்று அங்கங்களில் குறிப்பிட்டதொரு அங்கம் விரும்பத்தகாத அளவுக்கு அதிகாரத்தை எடுத்துக் கொண்டுவிடாமல் இருப்பதற்கும், குறிப்பிட்டதொரு அங்கத்தில் அதிகாரமானது குவிந்துவிடாமல் இருப்பதை உறுதிசெய்யும் மிக முக்கியமான நோக்கத்துடனும், அரசமைப்பானது அதிகாரத்தைச் செலுத்தும் போது ஓர் அங்கம்

[2011 செப்டம்பர் 7

மற்ற அங்கங்களுக்கு இணையாகச் சமன் செய்து கொள்ளும் ஒரு திட்டம் ஒன்றை அறிவுபூர்வமாக அறிமுகப்படுத்தி உள்ளது. நடைமுறைக்கு உகந்த முறையிலான அதிகாரப் பகிர்வானது, நாடாளுமன்ற மக்களாட்சியின் தனிச்சிறப்பு இயல்பாகும் என்பதோடு, அது தன்னிச்சையான நடவடிக்கைகளிலிருந்தும், அடக்கி ஒடுக்கும் எதேச்சதிகார ஆட்சியிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுவதற்கு முக்கியமான தேவையாகவும் இருக்கிறது. அரசின் சட்டமியற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதிபரிபாலனம் ஆகிய மூன்று முக்கிய அங்கங்களும் இணக்கமான முறையில் பணியாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டமன்றமானது, அரசமைப்பு சிறப்புரிமையின் நோக்கெல்லைக்குள் செயலாற்றவேண்டி உள்ளது. சட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய சட்டமியற்றுத் தகுதியினை அதுபெற்றிருத்தல்வேண்டும். சட்டமானது, அரசமைப்பின் வகைமுறைகளுக்கும், குறிப்பாக அடிப்படை உரிமைகள் தொடர்பானவகை முறைகளுக்கும் இணங்கிய வகையில் இருத்தல் வேண்டும். சட்டம் என்றாலே வாழும்குடி மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே என்று பொருள்படும். சமுதாயத்தின் இறையாண்மைச் சக்தியானது சட்டம் என்கிற மாபெரும் அங்கத்தின் மூலமாகவே மிளிர்கின்றது. நீதி நிர்வாகத்தை அமைத்து அதனைச் செயற்படுத்துவதுதான் சட்டத்தின் பொருட்பாடாகும். சட்டமானது மனித சமுதாயத்தின் மாண்பினைப் பேணிப் பாதுகாக்கிறது. மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டம், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை நிலையிறுத்துவதாகவும், சட்டரீதியான தீங்குகளை நீக்கவல்லதாகவும் இருத்தல் வேண்டும்.

இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும் போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

2011 செப்டம்பர் 7]

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213-வது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதைப் பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும் சட்டத் துறையின் முக்கிய பணியானது, சட்டமன்றப் பேரவை செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகை முறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:—

(1) சட்டக்கல்வி.

(2) சான்றுறுதி அலுவலர்கள்.

(3) மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு.

(4) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.

சட்டக் கல்வி

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன், சட்டக்கல்வித் துறையானது 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு,

தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக்கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக்கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996-1997ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 2006-2007ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை, அரசு சட்டக்கல்லூரியாக அறிவித்து, ஆணை பிறப்பிக்கப்பட்டது. 2008-2009 ஆம் கல்வி ஆண்டு முதல் வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் ஏழு அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

2011-2012 ஆம் கல்வியாண்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:

வ. எண்	சட்டக் கல்லூரியின் பெயர்	மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.
(1)	டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை. (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	2,288
(2)	அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,428
(3)	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,430

TRUTH ALONE TRIUMPHS

2011 செப்டம்பர் 7]

(4)	அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,430
(5)	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1,430
(6)	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்)	1,040
(7)	அரசு சட்டக் கல்லூரி, வேலூர் (இளநிலை சட்டப் படிப்பு மூன்றாண்டு சட்டப் படிப்பு மட்டும்)	240

வேலூர் அரசு சட்டக் கல்லூரியைத் தவிர, இதர அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித் தனியே விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவியர்களுக்கு விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக்கட்டடம் சமீபத்தில் கட்டி முடிக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக்கட்டடம் கட்ட, அபிஷேகபுரம் கிராமத்தில் நிலம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

மாணவர்கள் சட்டத்தைத் தமிழில் பயிலுவதற்கேதுவாக, தமிழில் சட்டப் புத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாடத் திட்டத்திலுள்ள, அனைத்து சட்டப் பாடங்களுக்கும் தமிழில் புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டு மொத்தம் 32 பாடப் பிரிவுகளுடன் 27 பாடப் பிரிவுகளுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் தமிழில் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

[2011 செப்டம்பர் 7

அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் பூர்த்தி செய்திட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், மாணவர்களின் நலன்கருதி இடைக்கால ஏற்பாடாக அப்பணியிடங்கள் முறையாக பூர்த்தி செய்திடப்படும் வரையில் அரசு சட்டக் கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மீளநியமனம் செய்திட சட்டக்கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், சட்டக் கல்லூரி முதல்வர்களே, வேலைவாய்ப்பகத்தை அணுகாமல் கௌரவ விரிவுரையாளர்களை சிலநெறி முறைகளைப் பின்பற்றி பயன்படுத்திக் கொள்ள அரசால் இசைவளிக்கப்பட்டுள்ளது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியை சார்ந்த ஏழு மாணவர்களுக்கு கடந்த 2011 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஆஸ்திரியாவிலுள்ள வியன்னாவில் நடைபெற்ற 18-வது ஆண்டு வில்லியம் சி.விஸ்பன்னாட்டளவிலான வணிகவியல் இசைவு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொள்ளவும், மேலும் ஹங்காங் நகரில் நடைபெற்ற 8-வது ஆண்டு வில்லியம் சி.விஸ் கிழக்கு பன்னாட்டளவிலான வணிகவியல் இசைவு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்துகொள்ளவும் ரூ.5.25 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டத்தில் அமைந்துள்ள நாவலூர் குட்டப்பட்டு என்ற இடத்தில் ஒப்புமையற்ற மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும் பொருட்டு சட்டம் இயற்றுதல் மூலம் தேசிய சட்டப் பள்ளியினை நிறுவிடவும், மற்றும் அதற்காக தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 25 ஏக்கர் நிலத்தை ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

சான்றுறுதி அலுவலர்கள்

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மைய சட்டம் 53/1952) முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 1-1-2011 அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை 1,582 ஆகும்.

2011 செப்டம்பர் 7]

மாநில ஆட்சிமொழி (சட்டப்) பிரிவு

1965 ஆம் ஆண்டு முதன் முதலாக மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம் சட்டச்சொற்களை அறுதிசெய்து சட்டச்சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிறபணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும், சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இதுமையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்த்து வருகிறது. மையச்சட்டங்களை மொழிபெயர்த்து புத்தகவடிவில் அச்சிடுவதற்கான செலவினை, மைய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சென்னையிலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமானது தமிழ்நாடு மாநிலத்தில் உயரிய சட்டக் கல்வியை வழங்குவது மற்றும் சட்ட அறிவைப் பரப்புவது என்பதான குறிக்கோளுடன் இம்மாநிலத்தில் அமைத்துருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று அப்போதைய மேதகு குடியரசு தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகமானது 3-10-1997 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயல்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

[2011 செப்டம்பர் 7

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் செயல்படும் ஏழு அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் உள்ள இடங்களுக்கான மாணவர் சேர்க்கை ஒற்றைச்சாளர முறையில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைகழகம் மூலமாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் மாணவர் சேர்க்கை சிரமமின்றி நடைபெற்று வருகிறது.

சென்னை, பெருங்குடியில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்காக கட்டடங்கள் கட்டுவதற்கென ரூ. 1,71,56,443/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்திற்கு பல்கலைக்கழக மானியக் குழுவானது XI-ஆம் திட்டத்தின்கீழ், பொது வளர்ச்சி நிதி மற்றும் அதன் தொடர்புடைய திட்டங்களுக்காக ரூ.50 இலட்சம் மற்றும் ரூ.1,81,05,000/- ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியைச் சார்ந்த ஐந்து மாணவர்கள் 2011 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற 18-வது ஆண்டு வில்லியம் சி.விஸ்பன்னாட்டளவில் உள்ள வணிகவியல் இசைவு மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மேலும் ஹாங்காங் நகரில் நடைபெற்ற 8-வது ஆண்டு வில்லியம் சி.விஸ்பன்னாட்டளவிலான வணிகவியல் இசைவு மாதிரி போட்டிகளில் கலந்துகொள்ளவும் ரூ.3.75 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சட்டப் பல்கலைக்கழகத்தில் செயல்படும் நாட்டுநலப் பணித்திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை "கிரியா" என்ற அமைப்பினருடன் சேர்ந்து, இரத்ததான முகாம், இலவச கண் சிகிச்சைமுகாம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

2011-2012 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி-II திட்டப்பணிகளுக்கான விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	திட்டப்பணிகளின் விவரம்	இறுதி நிலைச் செலவு: தொடர்செலவு	தொடராச்செலவு	மொத்தம்	2011-2012-ல் செலவு: வருவாய் கணக்கில் செலவு	மூலதன கணக்கில் செலவு	கடன் கணக்கில் செலவு	மொத்தம்	குறிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	10)
1.	அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் புத்தகங்கள் வாங்குதல்	—	7.00	7.00	7.00	—	—	7.00	மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது
2.	திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள், பேராசிரியர்கள் அறைகள் மற்றும் சிறிய கருத்தரங்கக் கூடம் கட்டுதல்.	—	85.58	85.58	—	70.52	—	70.52	மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது

வ. எண்	திட்டப்பணிகளின் விவரம்	தொடர்செலவு	தொடராச்செலவு	மொத்தம்	வருவாய் கணக்கில் செலவு	மூலதன கணக்கில் செலவு	கடன் கணக்கில் செலவு	மொத்தம்	குறிப்பு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	10)
3.	புரசைவாக்கத்திலுள்ள சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் முழுநேர விடுதி காப்பாளருக்கு இல்லக் குடியிருப்பு கட்டுதல்	—	9.08	9.08	—	9.08	—	9.08	மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
4.	பூம்மொழில் வளாகத்திலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள உணவு விடுதியின்மேல் இரண்டாவது மாடியில் விருந்தினர் இல்லம் கட்டுதல்.	—	13.40	13.40	—	13.40	—	13.40	மாநில திட்டக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
	மொத்தம்	—	115.06	115.06	7.00	93.00	—	100.00	